உ

வல்லபை கணேசர் பஞ்சரத்தினம்.

விநாயக கவசம்,

சிவகவசம், சத்திக்கவசம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதறாஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி

கடவுள் துணை.

சென்னை வல்லபை கணேசர்

பஞ்சரத்தினம்.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஓங்கார வடிவான மூர்த்தமே செந்துகிரி னொளி மேவு திருமுடியுமே லொளிர்கின்ற விளமதியு மறுகுமந் தாரமு முபயகன்னங்க ளியலும், பாங்கான நல்லடியர் தமைநோக்கு மூவிழியும் பரிசுதவு நீண்டகரமும் பக்கு வங்கொண்ட வான்மாக்களாணவக்கரி பணிக்கு மங்குச பாசமும், நீங்காத தொண்டான வானவர்கடம்பகையை நீக்குமோர் கொம்பினிலையு நிலவுபவனப்புவன போகநு கர்விக்கவேநேர்ந்தலட்டுக்கரமும்யான், ஆங்காரமானபே ...பாடநின்னடியோடுமகமேவ நிற்றலெந்நா ளருள்கொ ...னையம்பதிமேவு வல்லபையொ டமர்விநாயக

(க)

...திருவே யன்னமே வன்னமேயஞ்சுக ...லேயென்ன வந்நலார் தம்முருவமா ..., செந்தாமரைக்குவளை வள்ளைகு ...சந்துகிர்க் கோடலர் தளிர்திகழால்

ரம்பையாவம் வரா லென்னவே செப்பிச் செருக்கி நின்றேன், கொந்தார்மலர்க்கொன்றை யேயுங்கோடீரனருள் குஞ்சரமுகத்த வொற்றைக் கோடவென் வினையோடவருள்செயுந் தவவேட கொக்கரைசெறித்தவகட, அந்தாதுகுக்கு மந்தாரவெனவொருபோது மன்பினெடுரைக்க வறியேனருள்கொண்டு சென்னையம்பதிமேவி வல்லபையோடமர் விநாயகதெய்வமே. (௨)

முளைத்தவரை யிடைமுளைத் தவரைவரை வில்லாமுடித்தவரை நாண்மலக்கண் முந்திவந் தவரையவர் மூதண்ட வேதண்டமுற்றும் படைக்க முன்னர்க், கிளைத்தவன சத்தொடென் பான்பதும் முங்கொண்ட கேசவரை நீள்க ரத்துட் கோடறக் கொண்டுபின் னவ்வழியுஞ் கெவிவழியுங் கிளரச் செலுத்தி யன்பு, திளைத்தபெரி யோயென்னையு மாட்டுகொளத் திருவுளஞ் சேர்த்தருளவேண்டுகின்றேன் திகழ்மணி முடிப்பணங் கச்செனவயாவினிற் செறிவித்தவேரம்பனே, அளைப்புகுமகித்தனை நிகர்த்தனன் னெனவென்னை யகற்றிட நினைக்கல் கண்டாயருள் கொண்டு சென்னையம் பதிமேவு வல்லபையொடமர்விநா யகதெய்வமே. (௩)

மறைவழிப் பட்டவாசார நிலைசற்றிலேன்பதியிலேன் மதிவாணர்பால் மருவிடப் பெற்றிலே னெந்நெறியினினிலைநிற்க மாட்டுவே னேழையேனுன், குறையுளேனிழினுர்வாளுறையுளேன் காமாதிகோளர் பாலுறவுளே

ன்பால் கோள்சரவு கற்றுளே னுள்பலவு வீணிற்குறைத் திடுவ னேற்றோர்கள்பால், இறையுளேயன்பினேடியாத குணமுளே னேனுமற் றையபிறவிகட் கென்செய்யக்கூடுவேன் கூடுவா னமனென்னு மெண்ணமொரு சிறிதுமில்லேன், அறைகழற்பாதனே யெனையாளவேண்டினேனகல கிற்றிலே போதனே யருள்கொண்டு சென்னையம் பதிமேவு வல்லைபயொ டமர்விநா யகதெய்வமே. (ரு)

சல்லாத புல்லர்பா லில்லாமை யோதக் கருத்தூடு பலகருதியே கற்பனைகள் சாலச் செறித்திசை புகட்டிக் கவிச்சந்தமாலைசெய்து, மல்லார்ந்ததோளனேயெனறணீஇப் பசும்பொய்கள் மனமாறவே புகன்று மருகாமலறு கால் வளைந்தூது மந்தாரமாலை துயலும்புயத்தோய், நில்லாதவாழ்விலே நிற்குநெஞ் சுடையேனின் னேயவடிமலர்ந்துதிக்க நீதயைபுரிந்தருள் வழங்குதி முழங்குதிரை நீத்தமுண்டோன் கன்னனீர், அல்லார்ந்தசோலையூடோடவருள்வோயென வரற்றிடக் கருணைகூர்வா யருள்கொண்டு சென்னையம் பதிமேவு வல்லைபயொ டமர்விநாயக தெய்வமே. (சு)

முற்றிற்று.

கணபதிதுணை.

விநாயககவசம்.

—(*)—

ஆதியில் இக்கவசத்தைக் காசிபமுனிவர் முற்கலமுனிவருக்கு அருளிச்செய்ய, அவர்மாண்டவிமுனிவருக்கு அநுக்கிரசிக்க, அவர் மரீசிமுனிவருக்கு உபதேசத்தருள, அவர் பலமுனிவர்களுக்குத் திருவாய்மலர்தருளிச் செய்தனரென்றறிக.

நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்துகொண்டு ஒன்றுபட்டமனசுடனே விநாயகரை தியானித்து இதைச் செபிக்கவேண்டும்.

வளர் சிகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க வாய்ந்தசென்னி, யளவுபடாவதிகசவுந் தரதேகதோர்க்கடர்தாமமர்ந்துகாக்க விளரறநெற்றியையென்றும் விளங்கிய காசிபர்காக்க புருவந்தம்மைத், தளர்வின்மகோதரர்காக்க தடவிழிகள்பாலசந் திரனூர்காக்க. (க)

கவின்வளருமதரம் கசமுகர்காக்க தாலங்கணக்கிரீடர்காக்க, நவில்சிபுகங்கிரிசைசுதர் காக்கநனிவாக்கை

விநாயகர்தாங்காக்க, வவிர்நகைதுன்முகர்காக்க வள்ளெ
ழிற்செஞ் செவிபாசபாணிகாகக, தவிர்தலுறுதிளங்கொ
டிபோல் வளர்மணிநாசியைச் சிந்திதார்த்தர்காக்க. (உ)

காமருபூ முகந்தன்னைக்குணேசர் நனிகாக்ககளங்க
ணேசர்காக்க, வாமமுறுமிருதோளும் வயங்குகந்தபூர்வ
சர்தாமகிழ்ந்துகாக்க, வேமமுறுமணிமுலை விக்கினவிநா
யகன்காக்க விதயந்தன்னைத், தேதமகலுங் கணநாதர்கா
க்கவகட்டினைத் திலங்கேரம்பர்காக்க. (ங)

பக்கமிரண்டையுந் தராதரர்காக்க பிருட்டத்தைப்
பாவநீக்கும், விக்கினகரன் காக்க விளங்கிலிங்கம் வியா
ளபூடணர்தாங் காக்க தக்க குய்யந்தன்னை வக்கிரதுண்
டர்காக்க சகனத்தையல்ல, லுக்கணபன்காக்க வூருவை
மங்களமூர்த்தி யுவந்துகாக்க. (ச)

தாழ்முழந்தாண் மகாபுத்திகாக்க விருபத மேகதந்
தர்காக்க, வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க முன்கை
யைவணங்குவார்நோ, யாழ்தரச்செய்யாசாபூ ரகர்காக்க
விரல்பதும வத்தர்காக்க, கேழ்கிளருநகங்கள் விநாயகர்
காக்க கிழக்கினிற்புத்தீசர்காக்க. (ரு)

அக்கினியிற் சித்தீசாகாக்க வுமாபுத்திரர்தென் றி
சைகாக்க, மிக்கநிருதியிற் கணேசுரர் காக்க விக்கினவர்
தனர்மேற்கென்னுந், திக்கதனிற் காக்கவாயுவிற் கசகன்
னன்காக்க திகழுதீசி, தக்கநிதிபன்காக்க வடகிழக்குவீச
னந்தனரேகாக்க. (சா)

ஏகதந்தர்பகன் முழுதுங்காக்க விரவினுஞ்சந்தியிர ண்டன்மாட்டு, மோகையின் விக்கினகிருது காக்கவிரா க்கதர்பூதமுறுவேதாள, மோகினிபேயிவையாதி யுயிர் திறத்தால் வருந்துயருமுடிவிலாத, வேகமுறுபிணிபல வும் விலக்குபா சாங்குசர்தாம் விரைந்துகாக்க. (எ)

மதிஞானந்தவந்தான மானமொளிபுகள்குலம்வண் சரீரமுற்றும், பதிவானதனந்தானி யங்கிரகமனை விமை ந்தர்பயினட்பாதிக், கதியாவுங்கலந்து சர்வாயுதர்காக்க காமற்பவுத் திரமுன்னுன, விதியாருஞ் சுற்றமெலாமயூ ரேசரெஞ்ஞான்றும் விரும்பிக்காக்க. (அ)

வென்றிசீவிதங்கபிலர் காக்கரியாதியெலாம் கவிட ர்காக்க, வென்றிவவாறு துதனைதுக் காலமுமோதிடினு ம்பாலிடையூறென்று, மொன்றுறுமுனிவரர்கா ளறிமி ன்கள் யாரொருவரோதினலு, மன்றவாங்கவர்தே கம்பி ணியறவச்சிரதேக மாகிமன்னும் (கூ)

விநாயககவசம் முற்றிற்று.

பத்தியுடனே இந்தகவசத்தைப் பாராயணஞ்செய் பவர்களுக்குப் பிணியும் வருமையும், பேய் பூதங்களா லுண்டாகிற பலதுன்பங்களும், கவலைகளும் பாவமுத லியவைகளும் நீங்கும். அன்றியும் பெருஞ் செல்வமும் தீர்க்காயிசம், களத்திரபுத்திர மித்திராதிகளும், உண் டாகும், அன்றியும் யாத்திரையிலே இதைச்செபித்தா ல், சகலவிக்கினமும்போய்ப் பயன்களெல்லாம்கைகூடும்

உயுதத்திலே இதனைச்சொன்னால் ஜயமுண்டாகும். இருபத்தொருநாள் நாளொன்றுக்கு ஏழுமுறைதோத்திரஞ் செய்தால், மாரணநீங்குவதன்றி உச்சாடனத் ஆக்ருஷணம் ஸ்தம்பன முதலியவைகள் பயனுறும் இருபத்தொருநாள் நித்தியம் இருபத்தொருதரஞ்செபித்தால், சிறையிருப்பு விடுதலாவதுமன்றி அரசர்களுடைய நிஷ்டூரமு நீங்கும். அரசனைக்காணப் போகும்போது பத்தியினால், மூன்றுதரம் இதைஓதினால் அவன்வசப்படுவான். இதைப்படித்தாலும், ஒருவர் சொல்லக்கேட்டாலும், பூசித்தாலும், எப்படிப்பட்ட துன்பமும் நீங்கும்.

உ

கணபதிதுணை.

சிவகவசம்.

இந்தக்கவசம் பத்திராயுவென்னும் இராஜகுமாரனுக்குவிடபமுனி அருளிச்செய்ததென்று சைமிசாரணிய முனிவருக்குச் சூதமகா முனிவர் அநுக்கிரகித்தது.

பங்கயத் தவிசின்மேவி யிருந்துடற்பற்றுநீக்கி, யங்குநற்பூதசுத்தி யடைவுடன் செய்த பின்னர்க், கங்கையைத்தரித்தசென்னி கற்பகதருவைச்செம்பொற்,கொங்கைவெற்பனையபச்சைகொடியொடுபுளத்தில்வைத்தே.

அகிலநாயகனுய்ஞான வானந்தரூபியாகித்
துகடுருமனுவாய்வெற்பின் ஞேற்றமாயுயிரையெல்லாந்
தகவுடனவனியாகித் தரிப்பவனெம்மையிந்த
மகிதலமதனிற்றீமை மருவிடாதருணிற்காக்க. (௨)

குரைபுனலுருவங்கொண்டு கூழ்தொறும்பயன்கண ல்கித், தரையிடயுயிர்கள்யாருந் தளர்த்திடாவண்ணங்கா ப்போ, னிரைனிரைமுகில்களீண்டிநெடுவரை முகட்டிற் பெய்யும், விரைபுனலதனுள்ளீழ்ந்துவிளிந்திடாதெம்மை க்காக்க. (௩)

கடையுகந்தன்னிலெல்லா வுலகமுங்கடவுட்டீபா
லடலைசெய்தமலைதாள மறைதகநடிக்குமீச
னிடைநெறிவளைதாபத்தி லெறிதருசூறைக்காற்றிற்
றடைபடாதெம்மையிந்தத் தடங்கவுலகிற்காக்க. (௪)

தூயகண்மூன்றினேடு சுடரும்பொன்வதனநான்கும்
பாயுமான்மழுவினேடு பகர்வரதாபயங்கண்
பேயதிண்புயங்கநான்கு மிளிருமின்னனைதேச
மாயதற்புருடனெம்மைக் குணதிசையதனிற்காக்க

மான்மழுசூலந்தோட்டி வணைதருமக்கமாலை
கூன்மலியங்குசந்தீத் தமருகங்கொண்டசெங்கை
நான்முகமுக்கணீல நள்ளிருள் வருணங்கொண்டே
யான்வருமகோரமூர்த்தி தென்றிசையதனிற்காக்க.

திவண்மறியக்கமாலை செங்கையோரிரண்டுந்தாங்க
வவிர்தருமிரண்டுசெங்கைவரதத்தோடபயந்தாங்க, கவி

னிறைவதனநான்குங் கண்ணொருமூன்றுங்காட்டுந், தவ
ளமாமேனிச்சத்தியோ சாதன்மேற்சைசயிற்காக்க.

கறைகெழுமழுவுமானு மபயமுங்கண்ணிணும்
மறைதருதொடையுஞ்செய்ய வங்கைகணான்குமேந்திப்
பொறைகொணன் முகத்துமுக்கட் பொன்னிறமேனி
யோடு, மறைபுகழ்வாமதேவன்வடதிசையதனிற்காக்க.

அங்குசங்கபாலஞ்சூல மணிவாதாபயங்கள்
சங்குமான்பாசமக்கந் தமருகங்கரங்களேந்திக்
திங்களிற்றவளமேனி திருமுகமைந்தும்பெற்ற
வெங்களீசானதேவ னிருவிசும்பெங்குங்காக்க.   (கூ)

சந்திரமவுலிசென்னி தனிநுதற்கண்ணனெற்றி
மைந்துறுபகன்கண்டோட்டோன்வரிவிழியகிலநாதன்
கொந்துணர்நாசிவேதங் கூறவோன்செவிகபாலி
யந்தில்செங்கபோலந்தூய வைம்முகன்வதனமுற்றும்.

வளமறைபயிலுநாவ னுமணிநீலகண்டன்
களமடுபினுகபாணிமை யிணைதருவமாகு
கிளர்புயந்தக்கன்யாகங் கெடுத்தவன்மார்புதூய
வொளிதருமேருவில்லி யுதரபன்மதனைக்காய்ந்தோன்.

இடையிபமுகத்தோன்றாதையுந்தி நம்மீசன்மன்னும்
புடைவளரரைகுபேரமித்திரன் பொருவில்வாமம்
படர்சகதீசன்சானு பாய்தருமிடபகேது
மிடைதருகணைக்காலெங்கை தவிமலன்செம்பாதங்காக்க.

வருபகன்முதல்யாமத்து மகேசன்பின் னிரண்டாம்யாமம், பொருவறுவாம தேவன்புகன்றிடு மூன்றும்யாமஞ் செருமலிமழுவாலங்கைத் திரியம்பகனுலாம், யாமம் பெருவலியிடபயூர்தி பிணியறவினிதுகாக்க.

கங்குலின் முதல்யாமத்துக் கலைமதி முடித்தோன் காக்க, தங்கியவிரண்டாம்யாமஞ் சானவிதரித்தோன் காக்க, பொங்கிய மூன்றும்யாமம் புரிசடையண்ணல்காக்க, பங்கமினுலாம்யாமங் கௌரிதன்பதியேகாக்க.

அனைத்துள காலமெல்லா மந்தகற்கடிந்தோனுள்ளூந் தனிப்பெருமுதலாய்நின்ற சங்கரன் புரமுந்தானுவனப்புறுநடுவுந் தூயபசுபதிமற்றுமெங்கு, நினைத்திடற்கரியநோன்மைச் சதாசிவநிமலன்காக்க. (கரு)

நிற்புழிப் புவனநாதனே சூழிநிமலமேனிப், பொற்பிறமதாதிநாத னிருப்புழிப்பொருவிலாத, வற்புதவேதவேத்திய னருந்துயில் கொள்ளுமாங்கட், டற்பரசிவன்வழிக்குச் சாமளருத்திரன்காக்க. (கசு)

மலைமுதற் றுருக்கந்தம்மிற் புராரிகாத்திடுக மன்னுஞ், சிலைவலி வேடரூபன் செறிந்த கானகத்திற் காக்க, கொலையமர் கற்பத்தண்டகோடிகள், குலுங்கநக்குப் பலபடி நடிக்கும்வீர பத்திரன்முழுதுங்காக்க (கஎ)

பல்லுளைப்புரவித்திண்டேர் படுமதக்களிறுபாய்மாவில்லுடைபதாதிதொக்கு மிடைத்திடுமெண்ணில்கோடி

கொல்லையன்மாலைவேற்குறுகலர்குறுகுங்காட்,வல்லி யோர்பங்கன் செங்கைமழும் படைதுணித்துக்காக்க.

தத்துநீர்ப் புணரியாடைத் தாரணியைச்சுமந்துமா னப்,பைத்தலைநொடிர பாந்தட்பஃதலையணைத்துந் தேய்ந்து, முத்தலைபடைத்தொக்கு மூரிவெங்கனல்கொள்சூலம், பொய்த்தொழிற் கள்தர்தம்மைப் பொருத்தழித்தினிதுகாக்க.

முடங்குளை முதலாயுள்ளமுழுவலிக்கொடியமாக்க ளடங்கலும், பிளுகங்கொல்க வென்றிவையனைத்து முள் ளங், திடம்படவிளைந்துபாவஞ்செயும்சிவ கவசந்தன்னை, யுடன்படத்தரிப்பயானுலும்பொருகுவவுத்தோளாய்,

வேறு.

பஞ்சபாதங்கள்போம் பகைகண்மாய்ந்திடும்
மஞ்சலின்மறலியு மஞ்சியாட்செயும்
வஞ்சநோயழிந்திடும் வறுமைதீர்ந்திடுந்
தஞ்சமென்றிதனை நீ தரித்தல்வேண்டுமால்.

சிவகவச முற்றிற்று

உ

கணபதிதுணை.

வச்சிரபஞ்சரமென்னும்.

சத்திகவசம்.

தேவர்கள் தங்களுக்கு நெடுநாள் இடரிழைத்திருந்த துர்க்கனென்னும் அவுணனை உமாதேவியானவள் சங்கரித்து அவ்விடரை நீங்கியதுகண்டு அத்தேவியை வணக்கஞ்செய்து துதிசெய்தது இக்கவசமென்றறிக.

———

அங்கையிற்கரகந்தாங்கும் பிரமாணியருளினேடுந்
துங்கமென்சென்னிகாக்கவயிணவி துகளிலாக
மெங்கணு ங் காக்கசெய்ய வேந்தெழிலுருத்திராணி
தங்குமெண்டிசையுமன்பு தழைத்திடவினிதுகாக்க

கொன்னுனைச்சூலி சென்னி மயிரினைக்குறித்துக் காக்க மன்னுவெண்பிறை தாழ்சென்னி வயங்கொளி நெற்றி காக்க, பன்மயிர் புருவ மாளும் பரிவொடு முமையாள் காக்க, வென்னையாண் முக்கணீச னிறைவிகண்ணினைகள்காக்க.

வயமிகுமிமயவல்லி மூக்கினைமகிழ்ந்துகாக்க
செயையொடுவிசயைமேல் கீழிதழினைச்சிறந்துகாக்க
உயிலுடைச்சுருதிதூய வஞ்செவிகாக்கதண்ணென்
பயின்மலருறையுஞ்செல்வி பல்லினையுவந்துகாக்க

சண்டிமென்கபோலங்காக்க தவளநாண்மலரின்வைகு
மொண்டொடிநன்னுக்காக்க விசயைமங்கலைமற்றெவ்வா
கண்கவர்நாடிகாக்க காத்தியாயனிஞ்ஞான்று
முண்டகமலரிற்றூப முகத்தினைச்சிறந்துகாக்க. (சு)

காளமுண்டிருந்தநீல கண்டிமென்கழுத்துக்காக்க
கோளில்பூதாரசத்தி கவர்புறங்காக்ககூர்மி
நீளொளிசசந்திகாக்க யிந்திரிநெறியினோடுந்
தோளினைகாக்கபத்மை துணைமலரங்கைகாக்க. (ரு)

கமலகைவிரல்கள்காக்க விரசகையுகிர்கள்காக்க
திமிரமுண்டொளிரும் வெய்யோன்மண்டத்துறையுஞ்
செல்வி, யெமதிருவாகு மூலங்காக்கவானவர்களேத்த
வமிர்தலகரிநாளுமகன் மணிமார்புங்காக்க. (சா)

தரித்திரியிதயங்காக்க தயித்தியர்ச்செகுப்போன்மிக்க
கருத்தொடுமுலைகள்காக்க சகத்தினிலிறமைபூண்டோ
டிருத்தகுவயிறுகாக்க திகழ்ந்தபோகதிகனுள்ளத்
தருத்தியினுந்திகாக்க வசைவளர்முதுகுகாக்க. (எ)

கருதருவிகடைகாக்க கடிதலம்பாமைவாய்ந்த
குருமணிசகனங்காக்க குகாரணிகுய்யங்காக்க

வருடரவருமபாய கந்தினியபானங்காக்க
தெருளுடைவிபுலையென்றுஞ் சிறப்புடைகுறங்குகாக்க
விளிதைமென்முழந்தாள்காக்க வியற்சபைகணைக்
கால்காக்க களிதருகோரைவாய்ந்த பரட்டினைகாக்க மிக்
கவளிகொள்பாதலத்திற்செல்வோ ளணிகெழு புறந்தா
ல்காக்க, வொளிர்நகம் விரல்கள்சந்திரி யுக்கிரிபுவந்து
காக்க. (கூ)

தலத்துறைமடந்தையுள்ளங் காலினைகாக்கதண்ணென்
மலர்த்திருமனையைக்காக்க வயங்குகேததிரதையோங்கி
யுலப்பில்கேத்திரங்கள்காக்க பிரியகரையொழிவருது ந
லத்தகுமக்கடம்பை நன்குறக்காக்கவன்றே. (கய)

உயர்சனுதனியெஞ்ஞான்று மொழிவருமாயுள்காக்க
மயர்வறுசீர்த்தியாவு மாதேவிகாக்கமிக்க
செயிரறுதருமம்யாவுந் தனுத்திரிசிறந்துகாக்க
வியல்புடைக்குலத்தைவாய்ந்த குலதேவியினிதுகாக்க

சற்கதிபிரதைநல்லோ ரியைபினித்தயாவிற்காக்க
விற்கொடும்போரினீரில் வெளியினில்வனத்திற்சூதி
விற்புறமதனிலோங்கு சர்வாணிகாக்கவொண்ணுப்
பொற்றருமலர்கவேவிப் புக்கவரேத்தினரே. (கஉ)

சத்திகவச முற்றிற்று.

இந்தவச்சிரபஞ்சரத்தை யாவர்செபித்தாலும் அவர்களுடைய தேகத்திலுண்டாகிய வெப்புநோயொழியும் எட்டுதரஞ் சலத்தில் அபிமந்திரித்து அதனைஉட்கொண்டால்? வயிற்றுலேபொருந்திய குன்மஞ்சூலைமுதலிய நோயனைத்தும்நீங்கும். இரவில்வழிநடக்கும்போது செபித்தால், பூதம்பேயிவைகள் தொடரமாட்டாவாம் பிள்ளையைப்பெறமாட்டாமல் வருந்தப்படுகின்ற மாதருடைய அருகிலிருந்துசெபித்தாலும அல்லதுநீரிலோ தி உட்கொள்ளக் கொடுத்தாலும் விரைவிலே வருத்தநீங்கிப் பிள்ளைப்பெறுவார்கள். யுத்தத்திலே செபித்தால் சத்துருக்கள் தோல்வியடைவார்கள் சிறுபிள்ளைகளுக்கு நீரிலோ உட்கொள்ளக்கொடுத்தால் வியாதிநீங்கும் இதையவரோதினுலும் அவர்களைஉமாதேவிகாப்பாற்றுவாள்.

வல்லபை கணேசர் பஞ்சரத்தினம், விநாயக கவசம் சிவகவசம், சத்திகவசம்.

முற்றிற்று